பாதுகாப்பு அமைச்சு

# இலங்கை இராணுவம்

## பெறுகைக்கான அறிவித்தல்

## இலங்கை இராணுவத்திற்கு தேவையான சம்பா அரிசி மற்றும் கீறி சம்பா அரிசியினை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2021

1. ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பில் அமந்துள்ள இலங்கை இராணுவத் தலைமை அலுவலக கொள்முதல் குழுத் தலைவரினால் **2021.06.15** ஆம் திகதி முதல் **2021.12.31** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு இலங்கை இராணுவத்திற்கு தேவையான சம்பா அரிசி மற்றும் கீறி சம்பா அரிசியினை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

2. பின்வரும் பிரதேசங்களில் காணப்படும் இராணுவ முகாம்களுக்கான தனித் தனியான விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

   - இரத்மலானை
   - பனாகொடை
   - அனுராதபுரம்
   - ஹிங்குராக்கொட
   - காங்கேசன்துறை
   - முல்லைத்தீவு
   - கிளிநொச்சி
   - தியத்தலாவ

3. மனுதாரரினால் **பணிப்பாளர், வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து, இலங்கை இராணுவ முகாம் தலைமையகம்,** ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பில் அமைந்துள்ள இராணுவ முகாமில் தலைமை கொள்முதல் அதிகாரியிடம் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டமாக செலுத்திய பின்னர் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். மற்றும் குறிப்பிட்ட மீளளிக்கப்படாத மனுக்கட்டணம் 2016.06.17 ஆம் திகதி வெளியான பொது நிதி சுற்றறிக்கை எண் 06/2016 இன் படி தீர்மானிக்கப்படும். திருப்பிச் செலுத்தப்படாத கட்டணங்களின் பட்டியலை கீழே உள்ள பிரிவு 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர் சபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. மனு ஆவணங்களை வழங்கப்படும் திகதி, மனுக்களின் இறுதி திகதி மற்றும் மனுக்கள் திறக்கும் மற்றும் முடிவடையும் திகதி, நேரம் என்பன கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

   - மனு ஆவணங்ள் வழங்கப்படும் திகதி : 2021.05.18
   - மனு ஆவணங்ள் வழங்கப்படும் கடைசி திகதி : 2021.06.09 ஆம் திகதி பி.ப.04.00 மணி
   - மனுக்கள் முடிவடையும் கடைசி தேதி : 2021.06.10 ஆம் திகதி மு.ப.11.00 மணி
   - மனுக்கள் திறக்கும் நேரம் : 2021.06.10 ஆம் திகதி மு.ப.11.00 மணி

5. மனுக்கள் கிடைத்தவுடன் **செலின்கோ கட்டிடம், இல.167/30, அவிஸ்ஸாவெள்ள வீதி, ஒருகொடவத்தையில் அமைந்துள்ள இராணுவ முகாமில்** மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"இலங்கை இராணுவத்திற்கு தேவையான சம்பா அரிசி மற்றும் கீறி சம்பா அரிசியினை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2021"** எனக்குறிப்பிட்டு தலைவர், உபகரணங்கள் மாஸ்டர் ஜெனரல் கிளை, இராணுவ முகாமின் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு எனும் முகவர்க்கு அனுப்புதல் அல்லது **இராணுவ முகாம், செலின்கோ கட்டிடம், இல.167/30, அவஸ்ஸாவெள்ள வீதி, ஒருகொடவத்தை** எனும் முகவரியில் நேரடியாக வருகைத்தந்து கையளிக்கப்பட வேண்டும்.

7. விண்ணப்பதாரரினால் கேள்வி மனுக்களுடன் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்.

8. விண்ணப்பதாரர் ரேஷன்களை வழங்குவதற்காக வேறொரு தரப்பினருக்கு மாற்ற / நியமிக்க விரும்பினால், அந்த நபர்களின் விபரங்கள் (துணை ஒப்பந்தக்காரர்கள்) விண்ணப்பிக்கும் இடங்களின்படி குறிப்பிடப்பட வேண்டும்.

9. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனுப்பத்திரத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு உரித்தானது

10. சம்பா அரிசி மற்றும் கீறி சம்பா அரிசியை வழங்கும்போது, வழங்குனர்கள் அந்தந்த முகாம்களுக்கு ரேஷன்களை கொண்டு செல்ல போதுமான சேமிப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். இந்த கொள்முதல் பற்றிய முழு விவரங்களும் மனு ஆவணத்துடன் வழங்கப்படும்.

11. வழங்குனர்களை தெரிவுசெய்தல் மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும். இதற்கான கொள்முதல் வழிகாட்டுதல்கள் - 2006 (பொருட்கள் மற்றும் பணிகள்) இன் அத்தியாயம் 3.2 இன் பரிந்துரைகளின் அடிப்படையில் நடைபெறுவதுடன் வெளிநாட்டு மனுதாரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாது என்பதையும் நினைவில் கொள்க.

12. **இதுதொடர்பான மேலதிக விபரங்களை, இலங்கை இராணுவ முகாம் தலைமையகத்தின் வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து, பணிப்பாளர் நாயகத்திடம்** எதுவித கொடுப்பனவுகளும் இன்றி **பெற்றுக்கொள்வதுடன்,** கேள்விப் பத்திர விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 2021.05.18 ஆம் திகதி 2021.06.09 ஆம் திகதி வாரத்தில் வேளைநாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 வரையான காலப்பகுதியில் பரீசீலனை செய்யலாம்.

| | |
|---|---|
| கவனத்திற்கு | : **பணிப்பாளர், வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து,** |
| விலாசம் | : இராணுவத் தளபதி<br>இலங்கை இராணுவ தலைமையகம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு |
| தொலைபேசி | : 011-2302568, 011-2302569 |
| தொலைநகல் | : 011-2302569 |
| மின்னஞ்சல் | : dtesandt@army.lk<br>dtesandt@gmail.com |

**இராணுவத் தளபதி**

**இலங்கை இராணுவ தலைமையகம்**

**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு**